## நீங்கள் என்ன செய்ய முடியும்

1. **அறிகுறிகளைக் கற்றல்.** முக்கிய அறிகுறிகளைப் பட்டியலிடும் 17 மொழிகளில் அமைந்துள்ள வசதியான வாலட் அளவுள்ள எமது சுட்டு அட்டைகளுக்கு ஆணையிடுக. உங்கள் பகுதியில், துயருறுவோருடன் தொடர்பு கொள்வோருக்கு இந்த அட்டைகளை நீங்கள் அளிக்க முடியும். மேலும் இதன் மூலம் கற்றறிந்து கொள்க: *www.dhs.gov/bluecampaign.*

2. **மனிதக் கடத்தல் உளவுகளை அறிவித்தல்.**

   **ஐயத்திற்கிடமான மனிதக்கடத்தலை அறிவிக்க அல்லது கூட்டாட்சிசட்டத்தை நடைமுறைப்படுத்துவோரிடம் இருந்துஉதவிபெற, அழைத்திடுக 1-866-347-2423 அல்லது இந்த இணையம் மூலம் தெரிவித்திடுக www.ice.gov/tips.**

   உலகம் முழுவதுமுள்ள தனிப்பட்டோர்கள் ஐயத்திற்கிடமான குற்றச் செயல்பாட்டை ஆண்டு முழுதும், வாரத்தில் 7 நாட்களும் ஒரு நாளில் 24 மணி நேரமும் தாய்நாட்டுப் பாதுகாப்பு புலனாய்வாளர்களிடம் (HSI) அறிவிக்க முடியும். உளவு அழைப்பை பன்னாட்டளவில் **802-872-6199 வாயிலாக அணுக முடியும்.** பொதுமக்கள் மற்றும் சட்ட நடைமுறைப் படுத்தும் முகமைகளிடமிருந்து மனிதக் கடத்தல் உட்பட HSIஆல் நடைமுறைப்படுத்தப்படும் 400க்கும் மேற்பட்ட சட்டங்கள் சார்ந்த அறிக்கையைப **உயர் பயிற்சி பெற்ற வல்லுநர்கள்** பெற்றுக்கொள்வர்.

   **கீழ்க்கண்டவற்றைப் பெற, தேசிய மனிதக் கடத்தல் திரட்டல் வள மையத்தை (NHTRC) அழைக்கும் எண் 1-888-373-7888:**

   - உங்கள் பகுதியிலுள்ள சேவை வழங்குநரை தொடர்புகொண்டு உதவி பெற;
   - நடைபெறக்கூடிய மனிதக் கடத்தல் செயல் பற்றிய தகவலை வழங்க; அல்லது
   - பயிற்சி, தொழில்நுட்ப உதவி, அல்லது தகவல் வளங்களைக் கோரிப்பெற்று மேலும் அறிந்து கொள்ள.

   NHTRC என்பது நாட்டில் எங்கிருந்து அழைத்தாலும் பதிலளிக்கும் 24 மணி நேரமும் இயங்கும் அரசு சாரா

   நிறுவனத்தால் நடத்தப்பெறும் ஒரு கட்டணமில்லா அவசரத் தொலைபேசிச் சேவையாகும்.

3. **நீங்களும் உங்கள் சமூகமும் கற்றுக்கொள்க.** நீங்கள் அறிந்துகொள்ள வேண்டிய மனிதக் கடத்தல் மற்றும் பிற சுட்டுதல்களைப் பற்றி மேலும் அறிந்துகொள்ள இலவசக் கலந்துரையாடல் பாயிற்சியை ஆன்லைனில் பெறுக, உங்களுக்குத் தெரிந்த பிறரையும் பயிற்சி பெறுமாறு கேட்டுக்கொள்க. பின்வரும் வலைதளத்தை வலம் வரவும்:: *www.dhs.gov/bluecampaign.*

4. **உலகம் முழுதும் பரப்புக!** Blue Campaign பற்றி தோழர்களுக்கும், நாங்கள் அளிக்கும் பல திட்டங்கள், அவை எப்படி

   என்பவை பற்றியும் தோழர்கள் குடும்பம் மற்றும் ஆர்வமுள்ளவர்களுக்குக் கூறுக. மேலும் விவரங்களுக்கு பின்வரும்

   வலைதளத்தை வலம் வரவும் - *www.dhs.gov/bluecampaign.*

5. **Blue Campaign வலைத்தளம் காண்க.** மேலும் பயிற்சி, ஏமாற்றல் பற்றிய விவரம், துயருறுவோர் உதவிக்கான விவரங்கள், மனிதக் கடத்தலை நிறுத்தும் போராட்டத்தில் நீங்கள் சேர்வதற்கான தகவல்கள் ஆகியவற்றிற்குக் காண்க: *www.dhs.gov/bluecampaign.* Facebook "Like" : *www.facebook.com/bluecampaign.* அல்லது எம்மைத் தொடர்பு கொள்க: *BlueCampaign@hq.dhs.gov.*



துயருறுவோரைக் கண்டறிதல்
என் ஜி ஓ,
ஃபெய்த் பேஸ்ட் குழு

# வோரைக் கண்டறிதல் மற்றும் ஐயத்திற்கிடமான மனிதக் கடத்தலை அறிவித்தல்

BLUE CAMPAIGN
One Voice. One Mission. End Human Trafficking.™

## நீங்கள் என்ன செய்ய முடியும்?

***துயருறுவோரைக் கண்டறிதல் மற்றும் ஐயத்திற்கிடமான மனிதக்கடத்தலை அறிவித்தல்***

**துயருறுவோர் நேரடியாகக் காணப்படலாம்**

ஆசிரியர்கள்,,செவிலியர், சமூகப் பணியாளர்கள், நம்பிக்கை அடிப்படையிலான தலைவர்கள், மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் (NGOs) ஆகியோர் சமுதாய உறுப்பினர்கள் ஆவர் மற்றும் மனிதக் கடத்தலால் துன்புறுவோரைக் – கண்டறிந்து உதவ – முன்வருவோராவர். மனிதக் கடத்தலின் அறிகுறிகள் மற்றும் சுட்டுதல்கள் பற்றி நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். துயருறுவோரைக் கண்டறிந்து கடத்தல்காரர்களை நீதியின் முன் நிறுத்துவதில் இதுவே முதற்படி; இது உங்கள் சமுதாயம் பாதுகாப்பாக இருக்க உதவும்.

## கடத்தப்படும் துயருறுவோர் நமது சமுதாயங்களில் உள்ளனர்

**யு.எஸ் குடிமக்கள் உட்பட அவர்களின் வயது, இனம், பாலினம், தேசிய இனம் ஆகியவை எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம்.**

இடம் பெயர்வதற்கான சட்ட நிலைமையை அவர்கள் பெற்றோ அல்லது பெறாமலோ இருக்கலாம். துயருறுவோர் முறையான அல்லது முறையற்ற தொழிற்பகுதிகளில் காணப்படுகின்றனர்; சிலர் நல்ல ஊதியம், காதல் போன்ற பொய் வாக்குறுதிகளால் ஈர்க்கப்பட்டிருப்பர். வழிபாட்டு இடங்கள், பள்ளிகள், உணவகங்கள், விடுதிகள், கட்டிடம் கட்டும் இடங்கள், பண்ணைகள், பேருந்து மற்றும் இரயில் நிலையங்கள், விமான நிலையங்கள், அண்மையிலுள்ள பூங்காக்கள், ஊர்தி நிறுத்துமிடங்கள், நெடுஞ்சாலை ஓய்வகங்கள், அல்லது மசாஜ் செய்யுமிடங்கள், மது அருந்துமிடம் மற்றும் நிர்வாண நிலையங்களில் அவர்கள் காணப்படலாம். அடிக்கடி, அவர்கள் வீட்டுப்பணி, பண்ணை அல்லது தொழிற்கூடப் பணிகள் அல்லது பாலியல் வாணிகம் (விபச்சாரம்) செய்யுமாறு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். கூட்டாட்சி சட்டப்படி பாலியல் வாணிகத்தில் ஈடுபடுத்தப்படும் ஒவ்வொரு இளவயதினரும் மனிதக்கடத்தலின் துயருக்கு ஆட்படுகின்றனர்.

**கடத்தல்காரர்கள் எவ்வாறு செயல்படுகின்றனர்**

கடத்தல்காரர்கள் சமூகப் பாதுகாப்பு குறைந்த அல்லது இல்லாதவர்களை இரையாக்குகின்றனர். பொருளாதாரத் துன்பம், வீட்டில் வன்முறை, இயற்கைப் பேரிடர், அரசியல் நிலைத்தன்மை இன்மை போன்ற பல காரணங்களால் துன்புறுவோரை அவர்கள் எதிர்பார்க்கின்றனர். வன்முறை அல்லது மிரட்டல் போன்ற உத்திகள் மட்டுமின்றி உளவியல் முறையிலும் பலவந்தப்படுத்தி மக்களை வலுக்கட்டாயமாக அடிமைப்படுத்துகின்றனர். தாங்கள் அடிமைப்படுத்தப்படுகிறோம் அல்லது உயர்ந்த பொது அமைப்புகளிடம் உதவி கேட்க வேண்டும் என்பதைக் கூடப் பலராலும் உணரமுடியாத நிலைமையில் இந்த உணர்வதிர்ச்சி, மிகப்பெரிதாக அமைந்து விடுகிறது.

கடத்தல்காரர்கள் பெரும்பாலும் இவற்றைக்கொண்டு செயல்படுகின்றனர்:

- வன்முறையால் அல்லது ஒருவரை அல்லது அவர் குடும்ப உறுப்பினர்களை மிரட்டுதல்;
- ஊறு விளைவித்தல் அல்லது உணவு, நீர், அல்லது உறக்கம் போன்ற அடிப்படைத் தேவைகளை வழங்காமல் தவிர்த்தல்;
- காதல், நட்பு ஆகியவற்றில் பொய்யான வாக்குறுதிகளை அளித்தல்;
- நல்ல பணி அல்லது வீடு ஆகியவை பற்றிய பொய்யான வாக்குதிகளை அளித்தல்;
- துயருறுவோரைச் சமயச் சேவைகளில் கலந்து கொள்ளாமல் தடுத்தல்;
- நண்பர்கள் மற்றும் குடும்பத்தவருடனான தொடர்பைக் கட்டுப்படுத்தல்;
- ஓடியாடும் உரிமையை வரையறைக்குட்படுத்தல்;
- அவரது அடையாள ஆவணங்களைக் கட்டுப்படுத்துதல்;
- வெளியேற்றம் அல்லது சட்ட நடவடிக்கை ஆகியவற்றால் மிரட்டுதல்; மற்றும்/அல்லது
- அவரின் ஊதியத்தை கடன்களைக் கொடுப்பதற்கென்று முடக்குதல்.

**மனிதக் கடத்தலின் அறிகுறிகள்**

துயருறுவோரைக் கண்டறிதல் மற்றும் உளவு கூறுதல் வாயிலாக துயருறுவோரை மீட்க, சட்ட நடவடிக்கைக்கு உதவி, உங்கள் பணியை வழங்குவதால் நீங்கள் ஓர் உயிரைக் காப்பாற்றலாம். அவர்களது சுதந்திரம் மற்றும் கண்ணியத்தை மீட்பதற்கான மருத்துவ மற்றும் மனநலக் கவனிப்பு, அடைக்கலம், பணிப்பயிற்சி, மற்றும் சட்ட உதவி ஆகிய சேவைகளுடன் துயருறுவோரைத் நீங்கள் தொடர்புபடுத்த முடியும். உங்கள் பாதுகாப்பும் துயருறுவோரின் பாதுகாப்பும் மிகவும் முக்கியம். ஐயத்திற்கிடமான கடத்தல்காரருடன் நேரடியாக எப்போதும் மோத வேண்டாம் அல்லது துயருறுவோரை எச்சரிக்க வேண்டாம். ஏதேனும் சுட்டுதல்கள் இருப்பது அல்லது இல்லாமலிருப்பது மனிதக் கடத்தலின் நிரூபணமாக இருக்கத் தேவையில்லை. ஐயத்திற்கிடமான மனிதக் கடத்தலைப் புலனாய்வு செய்வது சட்ட நடவடிக்கைக்கு உட்பட்ட செயலாகும்.

- குடும்பம், நண்பர்கள், சமுதாய நிறுவனங்கள் அல்லது வழிபாட்டு இடங்கள் ஆகியவற்றிலிருந்து மனிதர் விலகியிருப்பது போல் தோன்றுகிறதா?
- குழந்தை பள்ளிக்குச் செல்வதை நிறுத்தி விட்டதா?
- மனிதரின் நடத்தையில் திடீரென்று நம்பமுடியாத மாற்றம் ஏற்பட்டுள்ளதா?
- இளைஞர் பாலியல் வாணிகச் செயல்களில் ஈடுபட்டுள்ளாரா?
- மனிதர் தொடர்பற்று அல்லது குழப்பமாக, அல்லது மனநோய் அல்லது உடல் வன்முறை அறிகுறிகளுடன் உள்ளாரா?
- மனிதருக்கு பல்வேறு நிலைகளில் ஆறிக்கொண்டிருக்கும் உடற்காயங்கள் உள்ளனவா?
- மனிதர் அச்சம், கோழைத்தனம் அல்ல்து மிகவும் பணிவு ஆகியவற்றுடன் இருக்கிறாரா?
- உணவு, நீர், உறக்கம் அல்லது மருத்துவக் கவனிப்பு ஆகியவை மறுக்கப்பட்ட அறிகுறிகளை மனிதர் காட்டுகிறாரா?
- பணிவுள்ள தோழர் ஒருவரின் நட்புடன் மனிதர் அடிக்கடி இருக்கிறார? அல்லது, நிலைமையின் கட்டுக்குள் இருக்கும், ஒருவருடன் இருக்கிறாரா எ.டு. அவர்கள் எங்கே போகிறார்கள் அல்லது யாருடன் பேசுகிறார்கள் ?
- என்ன சொல்ல வேண்டும் என்பதை மனிதருக்கு சொல்லிக் கொடுக்க வேண்டியுள்ளதா?
- தகுதியற்ற சூழல்களில் மனிதர் வாழ்கிறாரா?
- மனிதர் தனி உடமைகள் இல்லாமலிருக்கிறாரா மற்றும் நிலையான வாழ்க்கை நிலைமை இல்லாமல் இருக்கிறாரா?
- மனிதருக்கு ஓடியாடும் உரிமை உள்ளதா? அவர்கள் வாழுமிடத்திலிருந்து உரிமையுடன் வெளியேற முடிகிறதா? காரணமற்ற பாதுகாப்புக் கட்டுப்பாடுகள் உள்ளனவா?

BLUE CAMPAIGN
One Voice. One Mission. End Human Trafficking.™